# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 08 திங்கட்கிழமை 21.04.2025 கதிர் 174



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



# கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் இன்று காலமானார்!



வத்திக்கான், ஏப். 21

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் தனது 88 ஆவது வயதில் வத்திக்கானில் இன்று காலமானார்.

உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர் போப் பிரான்ஸில் உயிரிழந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

பல்வேறு உடல்நலப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டிருந்த போப் பிரான்சிஸ், 38 நாட்கள் வைத்தியசாலையில் தொடர் சிகிச்சையில் இருந்தார். உடல் நலம் சற்று தேறிய நிலையில் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் தீ மீண்டும் வத்திக்கான் திரும்பினார்.

வழக்கமான பணிகளைப் பார்க்கவும் தொடங்கினார். நேற்று ஈஸ்டரை முன்னிட்டு கத்தோலிக்கர்களுக்கு ஆசியும் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், இன்று காலை போப் பிரான்சிஸ், காலமானதாக, வத்திக்கான் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அவரது மறைவுக்குப் பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

அர்ஜென்டினா தலைநகர் பியூனஸ் ஐரிஸ் நகரில் 1936 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் திகதி போப் பிரான்சிஸ் பிறந்தார்.

அவர் 1969 ஆம் ஆண்டு கத்தோலிக்க பாதிரியாராகப் பணியில் சேர்ந்தார். பல்வேறு

7

# சஹ்ரானுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரணை வேண்டும்

## ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தல் நிகழ்வில் பேராயர் கோரிக்கை







கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்ட பயங்கரவாதக் குழுவின் தலைவர் எனக் கருதப்படும் சஹ்ரானுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் கோரிக்கை விடுத்தார்.

7

## சாமர சம்பத்துக்கு விளக்கமறியல் நீடிப்பு



பதுளை, ஏப். 21

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிமன்ற நீதிவான் நுஜித் டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

சாமர சம்பத் தசநாயக்க இன்று திங்கட்கிழமை காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே

7

## அநுர அணியினர் எல் போர்ட் காரர்கள்



### ரணில் கடும் விமர்சனம்

கொழும்பு, ஏப். 21

"நாடாளுமன்றத் தேர்தலின்போது எல் போர்ட் காரர்களைத் தெரிவு செய்ய வேண்டாம் எனவும்,

7

## பாப்பரசரின் மறைவுக்கு ஜனாதிபதி இரங்கல்



கொழும்பு, ஏப். 21

புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

குறித்த இரங்கல் செய்தியை தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

"புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு இலங்கை மக்கள் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அமைதி, இரக்கம் மற்றும் மனித நேயம் மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உலகில் ஓர் அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்– 6 ஆண்டுகள் நிறைவு!



கொழும்பு,ஏப்.21

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் நடாத்தப்பட்டு இன்றுடன் 6 ஆண்டுகள் நிறைவடைகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி கட்டுவாப்பிட்டி, சியோன் மற்றும் கொச்சிக்கடை தேவாலயங்களையும், கொழும்பிலுள்ள பிரதான மூன்று ஹோட்டல்களையும் இலக்கு வைத்து வெடிகுண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

அத்துடன் தெமட்டகொட பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் தெஹிவளையில் உள்ள தங்கும்விடுதியில்சிறு வெடிப்பு சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்த உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் போது வெளிநாட்டவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் உட்பட 270இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்று 6 வருடங்கள் கடந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, காலை 8:30 மணியளவில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தலைமையில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றது.

காலை 8:45 மணியளவில் அனைத்து மத ஸ்தலங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

மேலும் கர்தினால் மெல்கம் ரஞ்சித்தினால், பாப்பரசர் பிரான்சிஸிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின்பிரகாரம் ஏப்ரல் 21 தாக்குதல்களில் உயிரிழந்தவர்களை விசுவாசத்தின் சாட்சிகளாக அங்கீகரிப்பதற்கு வத்திக்கான் தீர்மானித்துள்ளது.

இதற்கான அங்கீகாரம் தொடர்பான பிரகடனம் இன்று மாலை 5:30 க்கு கட்டுவாபிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தில் அறிவிக்கப்படும் என பேராயர் இல்லத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பெண் போல் வேடமணிந்து திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட ஆண்கள்– யாழ். கோவிலில் சம்பவம்!

இணுவில் பகுதியில் உள்ள ஆலய மொன்றில் நேற்று (20) இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் பெண் வேடமணிந்த நான்கு ஆண் திருடர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலய தேர்த்திருவிழாவின் போது 4 பவுண் நகை களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆலய சூழலில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நால்வரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச நிறுவனங்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவித்தல்!

தேர்தல்கள் ஆணைக்குழு அனைத்து அரச நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அறிவித்தல் ஒன்றை வழங்கியுள்ளது.

அதன்படி உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஒவ்வொரு நிறுவனத்தின் அதிகாரிகளின் தரவுகள் உள்ளிட்ட ஏனைய விபரங்களைத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதிகாரிகளின் தரவுகள் மற்றும் வாகன விபரங்கள் உள்ளிட்ட தகவல்களை தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்குமாறு முன்னரே அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதும், சில நிறுவனங்களிடமிருந்து குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# சமூக விரோதிகளை கட்டுப்படுத்த கோரிக்கை









கொழும்பு,ஏப்.21

அரசுசட்டவிரோதமான மீன்பிடித்தொழிலைகட்டுப்படுத்தி நீரியல் வளங்களைப் பாதுகாப்பவர்களை அச்சுறுத்தும் சமூகவிரோதிகளை கட்டுப்படுத்த கோரிமுல்லைத்தீவு மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டசெயலகம் முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர் முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அதனைகட்டுப்படுத்துமாறு கோரி மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிவந்த நிலையில் அண்மைக் காலமாககடலிலும் நந்திக் கடல் களப்பு உள்ளிட்ட இழப்பு பகுதிகளில் சட்டவிரோத தொழில் களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது

இந்நிலையில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று அண்மையில் தீக்கிரியாக்கப்பட்டுள்ளது இந்நிலையில் சட்டவிரோத மீன்பிடி தொழிலை கட்டுப்படுத்துவதற்காக பாடுபடுகின்றவர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை கட்டுப்படுத்துமாறு கோரியேகுறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது .(ஐ)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் விசேட கலந்துரையாடல்!

கொழும்பு,ஏப்.21

தேர்தல்கள் ஆணைக்குழுவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இன்றையதினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம். எல்.ஏ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் செயலாளர்களும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைமுறைகள் தொடர்பிலும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடுவதற்காக அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்திற்காக பிரதிநிதிகள் தெரிவு, தேர்தல் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது என்பது குறித்தும் இதன்போது ஆராயப்பட உள்ளது.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பு பணிகள் மற்றும் எதிர்கால திட்டமிடல்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடுவதற்காக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் இன்று தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இன்றையதினம் 112 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் வாக்காளர் அட்டைகள் அடங்கிய பொதிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளின் ஊடாக, தபால் நிலையத்திற்கு வழங்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.எல்.ஏ.ரத்நாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மட்டு. சீயோன் தேவாலயத்தில் 6 வது ஆண்டு நினைவேந்தல்



மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு அன்று நடைப்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6 ம் ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை (21) தேவாலயத்தின் முன்னால் உயிரிழந்தவர்களின் உறவுகள் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் மெழுகுவர்த்தி ஏற்றி மலர் வைத்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் கட்சியின் தலைவர் சிவதர்சன் தலைமையில் ஏற்பாட்டினை அடுத்து குண்டுவெடிப்பில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு காலை 9.05 தேவாலயத்தின் முன்பகுதியில் உயிரிழந்தவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏற்றி நிமிட அஞ்சலி மௌன செலுத்தினர்.

இந்த நினைவேந்தலையிட்டு அங்கு பலத்த பாதுகாப்பு கடமையில் பொலிஸார் விமானப்படையினர் ஈடுபட்டதுடன் இந்த தற்கொலை குண்டு தாக்குதலில்14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 80 பேர் படுகாயமடைந்து குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின்வாரிய ஊழியர்கள் மீது தி.மு.க.,வினர் தாக்குதல்: நடவடிக்கை எடுக்காதது ஏன் அண்ணாமலை கேள்வி




மின்வாரிய ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்திய தி.மு.க.,வினர் மீது போலீசார் நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

சென்னை வடபழனி ஆற்காடு சாலை அருகே, பணியில் ஈடுபட்டிருந்த மின்வாரிய ஊழியர்கள் மீது, விருகம்பாக்கம் தி.மு.க., சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர் ராஜாவின் அடியாட்களான, 136-வது வட்ட தி.மு.க., பொருளாளர் கார்த்தி மற்றும் வினோத் ஆகிய நபர்கள், காவல்துறையினர் கண்முன்னே, கடுமையான தாக்குதல் நடத்தியிருக்கும் காணொளி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. அரசு ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தும் திமிர் இவர்களுக்கு எங்கிருந்து வருகிறது?

கனிமொழி எம்.பி., பங்கேற்ற விழாவில், பெண் காவலரிடம் பாலியல் அத்து மீறலில் ஈடுபட்டதும் இதே பிரபாகர் ராஜாவின் அடியாட்கள்தான். தொடர்ந்து, பிரபாகர் ராஜாவின் அடியாட்களின் அராஜகம் அதிகரித்துக் கொண்டே இருந்தாலும், காவல்துறை எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

மின்வாரிய ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்திய தி.மு.க., ரவுடிகள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், குறைந்தபட்சம், இந்தப் பகுதிகளில், 'தி.மு.க.,வினர் உலவும் பகுதி, பொதுமக்கள் கவனத்துடன் இருக்கவும்' என்ற எச்சரிக்கைப் பலகையாவது வைத்தால், பொதுமக்கள், தாங்களே முன்னெச்சரிக்கையுடன் இருக்க வாய்ப்பிருக்கிறது.

இவ்வாறு அண்ணாமலை அறிக்கையில் கூறியுள்ளார். (ஐ)

# அப்போ இனித்தது... இப்போ கசக்குதா? தி.மு.க.,வுக்கு இ.பி.எஸ்., கேள்வி



'இது எங்களுடைய கட்சி. நாங்கள் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்போம். தி.மு.க.,வை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி அமைப்போம்' என்று சட்டசபையில் இருந்து வெளியே வந்த அ.தி.மு.க.,பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தெரிவித்துள்ளார்.

அவர் பேசியதாவது சட்டசபையில் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன். திருச்சி மாநகராட்சிக்குட்பட்ட உறையூர் பகுதியில் கழிவுநீர் குடிநீரோடு கலந்து வந்த காரணத்தினால், அப்பகுதியில் இருக்கும்மக்கள் அதனை குடித்துள்ளனர். இதனால், 4 பேர் உயிரிழந்துள்ளனர். இது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தேன்.

15 நாட்களாக இந்த கழிவுநீர் கலந்த குடிநீரைத் தான் அந்த மக்கள் குடித்து வந்துள்ளனர். இதுபற்றி மாநகராட்சி அதிகாரிகளிடமும் கூறியுள்ளனர். அதிகாரிகள் கண்டுகொள்ளாத காரணத்தினால், 4 பேர் உயிரிழந்தனர். பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குடிநீரில் கழிவுநீர் கலக்கவில்லைஎன்று அமைச்சர் கூறினார். மாநகராட்சிக்கு அருகில் நடந்த சித்திரை திருவிழாவில் வழங்கப்பட்ட உணவு, குளிர்பானம், மோர் உள்ளிட்டவற்றை சாப்பிட்டதன் காரணமாகவே இந்த நிகழ்வு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார்.

சித்திரை திருவிழாவில் உறையூர் பகுதி மக்கள் மட்டும் தான் கலந்து கொண்டார்களா? பல்வேறு இடங்களில் இருந்தும் இந்த விழாவில் பங்கேற்றனர். அவர்களுக்கு எல்லாம் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இதை இந்த அரசு மறைத்து தவறான செய்தியை வெளியிட்டுள்ளது.

இதேபோல, கடந்த 2024ம் ஆண்டு சென்னை பல்லாவரத்தை அடுத்த மலைமேடு பகுதியில் குடிநீருடன் கழிவு நீர் கலந்ததை குடித்ததில், 3 பேர் உயிரிழந்தனர். அப்போதும், அந்தப் பகுதி அமைச்சர் இதே கருத்தை தான் சொன்னார். வேண்டுமென்றே இந்த அரசாங்கம் ஆட்சியில் நடந்த சம்பவங்களை மறைப்பதை கொள்கையாக வைத்துள்ளது. இது கண்டிக்கத்தக்கது.

எங்களைப் பொறுத்தவரையில் கழிவுநீர் குடிநீரோடு கலந்து வந்ததை குடித்ததால் தான் இந்த சம்பவம் நடந்துள்ளது. குடிநீரில் கழிவு நீர் கலப்பதை தடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீட் தேர்வை கொண்டு வந்ததே தி.மு.க.,வும், காங்கிரசும் தான். அதனை தடுத்து நிறுத்த முயற்சித்தது அ.தி.மு.க., எங்கள் ஆட்சியில் வேறு வழியில்லாமல் கொண்டு வரப்பட்டது. 2010ல் நீட் தேர்வை கொண்டு வரும் போதே ரத்து செய்திருக்கலாம். இதனை செய்திருந்ததால், இத்தனை உயிர்களை இழந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு முழு முழு காரணம், தி.மு.க., தான்.

எப்போது பார்த்தாலும், தி.மு.க., மற்றும் அவர்களின் கூட்டணி கட்சியினர், அ.தி.மு.க., பா.ஜ.,வுடன் கூட்டணி என்று அறிக்கை விடுகிறார்கள். இன்று முதல்வரே துடிதுடிக்க பேசுகிறார். நாங்கள் கூட்டணி வைத்தால், நீங்கள் ஏன் பதறுகிறீர்கள். ஏன் கோபப்படுகிறீர்கள். நீங்க ஏன் பயப்படுகிறீர்கள்.

இது எங்களுடைய கட்சி. நாங்கள் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைப்போம். 2026 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க., பலம் வாய்ந்த கூட்டணியை அமைப்போம். முதல்வருக்கு பயம் வந்து விட்டது. முதல்வர் பதற்றப்படுவதை சட்டசபையில் பார்த்தேன். தி.மு.க.,வை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி அமைப்போம்.

ஊழலை விட மதவாதம் என்பது கொடுமையானது அல்ல என்று 1999ல் பா.ஜ.,வுடன் கூட்டணி வைத்த கருணாநிதி பேசியுள்ளார். பா.ஜ.,வுடன் தி.மு.க., இணைந்து பணியாற்றிய போது இனித்தது. இப்போது கசக்குதா? 1999ல் தி.மு.க., பா.ஜ.,வுடன் கூட்டணி அமைத்து வெற்றி பெற்று மத்தியில் ஆட்சியில் இருந்த போது, தி.மு.க.,வை சேர்ந்த அமைச்சர் ஒருவர் நோய் வாய்ப்பட்டார். அவரை ஒரு வருடம் இலாகா இல்லாத அமைச்சராக வைத்திருந்தது. அப்போது, பா.ஜ., கட்சி நல்ல கட்சியாக தெரிந்தது. இப்போது, கூட்டணி வைத்தால் ஏன் வைக்கிறீர்கள்? என்கின்றனர், இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# அ.தி.மு.க., நிபந்தனை விதிக்க தயாரா? இ.பி.எஸ்.,க்கு முதல்வர் ஸ்டாலின் கேள்வி

மூன்று நாட்கள் விடுமுறைக்கு பிறகு தமிழக சட்டசபை இன்று (ஏப்.,21) மீண்டும் கூடியது. மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்றது. சட்டசபையில் பேசும்போது, "நீட் தேர்வுக்கு பிள்ளையார் சுழி போட்டது யாருடைய ஆட்சியில் ? நீட் தேர்வு தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஒரு மூத்த வழக்கறிஞர் வாதாடினார்" என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., கேள்வி எழுப்பினார்.

இது குறித்து பதில் அளித்து சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: எதிர்க்கட்சி தலைவர் யார் கொண்டு வந்தது, யார் கொண்டு வந்தது, கொண்டு வந்த காரணத்தினால் தான் இவ்வளவு சிக்கல் என்று சொல்கிறார். சரி அந்த சிக்கலை சரி செய்வதற்கு, உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. நாங்கள் செய்தது தவறோ, தவறு இல்லையோ, அந்த விவாதத்திற்கு நான் போகவில்லை, விவாதத்திற்கும் வரவும் இல்லை.

இப்பொழுது இருக்கும் நீட் தே ர்வை ரத்து செய்தால் தான் நாங்கள் கூட்டணியில் இருப்போம், இல்லை என்றால் கூட்டணியை விட்டு விலகுவோம் என்று சொல்வதற்கு உங்களுக்கு தகுதி இருக்கிறதா? அதான் கேள்வி. வாக்குறுதி கொடுத்தது உண்மை தான், அதில் நாங்கள் எந்த விதமான மறுப்பும் சொல்லவில்லை.

இப்பொழுது கூட்டணி அமைத்து இருக்கிறீர்களே, இந்த கண்டிஷன் போட்ட உங்களுக்கு அருகதை இருக்கிறதா? நாங்கள் யாரும் ஏமாற்றி ஆட்சிக்கு வரவில்லை. 2 மாதங்களுக்கு முன் 2026ல் மட்டுமல்ல, 2031ம் ஆண்டிலும் கூட்டணியில் இருக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு இப்பொழுது கூட்டணி அமைத்து இருக்கிறீர்களே, யாரை ஏமாற்றும் நாடகம் சொல்லுங்கள். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)

# இலங்கையில் பெண்ணியக்க வரலாறும் தமிழ் பெண்ணியலாளர்களும்

அஞ்சனா

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஆறுமுக நாவலர் வழி வந்த சேர். பொன்னம்பலம் இராமநாதன் தமிழ் கலாச்சாரத்தையும் சைவத்தையும் பேணிக் காத்தவராக போற்றப்பட்டவர்.

ஆனால் சைவ மறுமலர்ச்சி கண்ட தமிழர் சமூகத்தில், குறிப்பாக இலங்கையின் வடக்கு பகுதிகளில், யாழ் சைவ வேளாள உயர் குழாமின் கைகள் ஓங்கியிருந்தன. அத்துடன் அக்காலத்தில் இலங்கையில் தமிழர் புராதன வழிபாடு மறைந்து, வைதீக மத வருணாசிரம கோட்பாடு செல்வாக்கு செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இன ரீதியாக பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டு, பிரதேசவாரி பிரதிநிதித்துவம் சட்டநிருபண சபைக்கு 1931 டொனமூர் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டபோது, இராமநாதன் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையை கோரி வாதாடினார். ஏனெனில் தமிழர் போன்ற சிறுபான்மை இனத்தவரின் அரசியல் பிரதிநிதித்துவம் இச்சீர்திருத்தத்தால் பாதிக்கப்படுவதை உணர்ந்து வாதிட்டது சரியான நகர்வு எனினும், சர்வஜன வாக்குரிமை எதிர்ப்பதற்கு அது மட்டுமே நியாயமான காரணம் கிடையாது.


பெண்கள் அரசியல் ஈடுபாடற்றவர்கள், வீட்டை கவனிக்க மாட்டார்கள் என்ற ஆணாதிக்க சிந்தனையும் சொத்தும் கல்வியுரிமையும் கொண்ட உயர் வகுப்பினரின் கைகளில் அதிகாரத்தை தக்க வைக்கும் நோக்குமே ஆகும்.

சொத்துடையவர்க்கு மட்டுமே நாட்டுப்பற்று உண்டு எனவும் கல்வியறிவு அற்றவர்கள் தவறான முறையில் வாக்குரிமையை பயன்படுத்துவர் என்றும் இராமநாதன் உட்பட ஏனைய பிரதான அரசியல் தலைவர்கள் வாதிட்டனர். ஆனால் தொழிற்சங்கவாதியான ஏ.இ. குணசிங்கா சர்வஜன வாக்குரிமையை ஆதரித்தார். கலாநிதி முருகர் குணசிங்கத்தின் 'இலங்கையில் தமிழர்



ஒரு முழுமையான வரலாறு கி.மு. 300 - கி.பி.2000- மற்றும் யோதிலிங்கத்தின் 'இலங்கையின் அரசியல் யாப்புக்கள்' ஆகியவற்றில் இந்நிகழ்வுகள் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்நூல்களில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்ற பிரச்சாரத்தை சூழ்ந்த ஆணாதிக்க கருத்தியல் கொண்ட சம்பவங்களும் கூற்றுக்களும் மிகக்குறைவாகவும் முக்கிய விடயங்கள் விடுபட்டும் பதிவாகியுள்ளன.

குறிப்பாக கலாநிதி குணசிங்கத்தின் 675 பக்க ஆய்வு நூலில், அந்நிகழ்வுகள் பெரியளவில் சுட்டிக் காட்டப்படவில்லை என்பது நமது அவதானிப்பு. பெண்களின் உரிமைப் போராட்டங்கள், பெண்ணியக்க வரலாறுகள், பெண் கல்வி, அதன் சமூகப் பார்வை, ஆண் நோக்கிலும் ஆண் குரல்களிலும் எழுதப்பட்ட நூல்களில் மறைக்கப்பட்டதோ விடுபட்டதோ ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



குமாரி ஜயவர்த்தன

வாக்குரிமை சங்கத்தின் மனு டொனமூர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போது, ஆண்கள் அதனை எள்ளி நகையாடியதாக ஒரு குறிப்பு, குறமகளின் 'யாழ்ப்பாண சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு' என்ற நூலில் பதிவாகி உள்ளது. பெண்கள் வாக்குரிமை சங்கத்தினரின் செயல்வாதத்துக்கு எதிராக 'இந்து சாதனம்' என்ற பத்திரிகையில் அதன் ஆசிரியர் தலையங்கத்தில்- கொழும்பிலே உள்ள ஆண் தன்மை பூண்ட தன்னிஷ்ட பெண் ஜன்மங்கள் சிலர் கேள்விக்கிசைந்தே விசாரணைக்காக சபையாரும் பெண் என்றால் பேயும் இரங்கும் என்ற பழமொழிப்படி உடன்பட்டுவிட்டார்கள். இத்திருத்தம் எங்கள் சாதி, சமயம், தேசம், பழக்கவழக்கம், கொள்கைகள் என சொல்லப்படுவன எல்லாவற்றிற்கும் முழுமாறானதாகும்- மேலும் பறங்கியர், ஒல்லாந்தர் முதலாம் அந்நிய சமயத்தினர் இந்த இலங்கையை பரிபாலித்த போது சமய நிஷ்டூரம் செய்தனரேயன்றி இந்த விதமாக எங்கள் சாதிக்கட்டுபாட்டை அழித்து, இங்குள்ள பெண்களை பொது கருமங்களில் பிரவேசிக்க செய்து பொது மகளிர் ஆக்கி விடவில்லை- என 08.11.1928 பதிப்பில் வெளியாகி உள்ளது.

மனோன்மணி பற்குணம் அவர்கள் 'பெண்களும் அபிவிருத்தியும் அனுபவங்களும் பிரச்சினைகளும்' என்ற கட்டுரையில் இது பற்றி குறிப்பிட்டுள்ளார். குடும்ப விடயங்கள் தவிர்த்து அரசியல் விடயங்களில் ஈடுபடும் பெண்களை 'பொது மகளிர்' என்று விளித்தனர். இக்கட்டுரை 'இலங்கையில் தமிழ் பேசும் பெண்கள் - சமூகமும் பண்பாடும்' என்ற ஆய்வரங்க 1999 தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அக்கால பத்திரிகைகளும் பரவலாக இதே எண்ணங்களைக் கொண்ட கருத்துக்களை பிரதிபலித்தன.

இந்து சாதனத்தின் மேற்கூறிய பிரசாரத்திற்கு பதிலாக மங்களம்மாள் எனும் பத்திரிகையாளர், இந்து சாதன ஆங்கில பதிப்பில் கடிதம் வாயிலாக 'இப்போது நிலவும் அசமத்துவ நிலை நீக்கப்பட்டு இலங்கைப் பெண்கள் ஆண்களுடன் சமத்துவமான அரசியல் உரிமைகளை பெற வேண்டும்' என எழுதியிருந்தார். மேலும் 'பெண்களுக்கு விவாகம் ஒன்றே முடிந்த முடிவு எனக் கருதக்கூடாது. பெண்கள் கன்னிகளாக இருந்து கடவுள் பணியோ அல்லது சமூக சேவையோ செய்ய முடியும்' எனவும் பகிரங்கமாக வாதிட்டு எழுதியது, இலங்கை தமிழ்ப் பெண்களின் பெண்ணிலை வாதச் செயற்பாடுகளுக்கு சிறந்த சான்றாகும்.

மங்களம்மாள் மாசிலாமணி 1902 இல் பெண்கள் சேவா சங்கம் எனும் அமைப்பை யாழ் வண்ணார் பண்ணையில் தொடங்கியதோடு 'தமிழ் மகள்' என்ற சஞ்சிகையை நடத்தி வந்தார். இவரது பெண்ணிலைவாத செயற்பாடுகளை, சமூக சேவைகளை பேசுவது என்றால் தனியாக ஒரு கட்டுரையில் உரையாடும் அளவிற்கு அவரது செயற்பாடுகள் அக்கால கட்டத்தில் அளப்பரியது.

இலங்கையின் முதல் பெண் பத்திரிகையாளர் என்ற பெருமையும் இவரையே சாரும். 40 வருடங்களாக தமிழ் மகள் சஞ்சிகை நடாத்தி வந்தார் மங்களம்மாள். 'பெண் சமத்துவம், தீண்டாமை, சீதனக் கொடுமை, கன்னிப் பெண்களின் சமூகத் தொண்டு ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள், இந்தியச் செய்திகள் அடங்கலாக கட்டுரைகள் மற்றும் இலங்கையின் அன்றாட அரசியல் சமூக பிரச்சனை பற்றி கருத்துகளை அப்பத்திரிகை தாங்கி வந்தது' என குறமகள் எனும் புனைபெயர் கொண்ட வள்ளிநாயகி இராமலிங்கம் தனது ஆய்வு நூலில் (2006 பதிப்பு) பதிவு பண்ணியுள்ளார்.

மங்களம்மாவை போன்ற ஒரு எழுத்தாளராக, மீனாட்சியம்மாள், மலையக மக்களுக்கான சேவைகளில் தன்னை அர்ப்பணித்தவர். அவரின் கணவரின் பத்திரிகையான 'தேச பக்தனி'ல் தொடர்ச்சியாக எழுதி வந்தவர். பொன்னம்பலம் இராமநாதனின் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டியதில்லை என்ற கருத்தை கண்டனம் செய்து எழுதிய பதிவு, தேச பக்தனில் 1928 இல் வெளியாகி இருந்தது. மீனாட்சியம்மாளின் சாதனைகளும் தனியாக பேசப்பட்ட வேண்டியவையே.

யாழ்ப்பாணத்திலிருந்து மங்களாம்மாள் பழைமைவாத கலாச்சார பாதுகாவலர்களுக்கு எதிராக எழுப்பிய குரல், மலையக மக்களை விழிப்படையச் செய்வதில் மீனாட்சியம்மாள் உரிமைக்காக ஓங்கியெழும்பிய கோஷம், கொழும்பில் அடிமைத்தனத்துக்கு எதிராக அயராது பணிபுரிந்த நல்லம்மா சத்தியவாகீஸ்வர ஐயரின் எழுச்சிப் பணிகள் என சமுதாய மாற்றத்துக்கு



முன்னோடிகளாய் இப்பெண்கள் இருந்தனர்.

இவர்களோடு நேசம் சரவணமுத்து, திருமதி பி. ஆர். தம்பிமுத்து, அன்னம்மா முத்தையா போன்றோர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்களின் அரசியல் உரிமைகளுக்காக போராடிய முக்கிய ஆளுமைகளில் சிலர். 1932, 1936 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்க சபைக்கு இடம்பெற்ற தேர்தல்களில் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ்ப் பெண் என்ற பெருமைக்குரியவர் நேசம் சரவணமுத்து.

இம்முக்கிய வரலாற்று நிகழ்வுகளை தொடர்ந்து பல பெண் அமைப்புக்கள் பெண்விடுதலை கருத்துக்களை முன் வைத்து போரட தொடங்கினர். 1944இல் அகில இலங்கை பெண்கள் சம்மேளனம் எனும் மத்தியதர வர்க்கப் பெண்கள், அரசியல் மற்றும் சட்ட உரிமைகளை கோரி பல கூட்டங்களை நடத்தியதாக ஒளவை விக்னேஸ்வரன், 'பெண்கள் அமைப்பாதல்' என்ற கட்டுரையில்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# அமெரிக்காவுடன் ஒப்பந்தம் கூடாது உலக நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை




தங்களுக்கு பாதகம் ஏற்படுத்தும் விதமாக, அமெரிக்காவுடன் பொருளாதார ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் உலக நாடுகளை கடுமையாக எதிர்ப்போம் என்று சீனா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. அதிபராக பொறுப்பேற்ற முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வரும் டிரம்ப், மற்ற நாடுகள் தங்களுடைய பொருட்களுக்கு விதிக்கும் வரிக்கு நிகராக பரஸ்பரம் அதே அளவுக்கு வரி விதிப்போம் என்பதில் உறுதியாக இருந்து வருகிறார். இந்தியா உள்பட பல நாடுகளுக்கு வரிகளை உயர்த்தியும், மாற்றியும் அமைத்தார். அந்த வகையில், சீன பொருட்களுக்கு 145 சதவீதமாக இருந்த இறக்குமதி வரியை 245 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்கா அறிவித்தது. இதனால், அமெரிக்கா- சீனா ஆகிய இருநாடுகளுக்கு இடையே வர்த்தகப் போர் தீவிரம் அடைந்துள்ளது.


'ஆர்டர்' ஆக வர்த்தக விசாரணைகள் கனியுமா? நம்பிக்கையுடன் ஏற்றுமதியாளர்கள்

இந்த நிலையில், பெய்ஜிங்கிற்கு பாதகத்தை ஏற்படுத்தும் விதமாக, அமெரிக்காவுடன் பொருளாதார ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் உலக நாடுகளுக்கு சீனா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுபோன்று அமெரிக்காவுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எதிராக, உறுதியான மற்றும் பரஸ்பர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சீன வர்த்தக அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுடனான வர்த்தப் போரை தீர்க்கும் நாடுகளுக்கு மதிப்பு கொடுப்போம் என்று கூறிய சீனா, அமெரிக்கா மட்டுமின்றி, எங்களை குறைத்து மதிப்பிடும் நாடுகளுடனும் எந்தவிதமான ஒப்பந்தங்களையும் மேற்கொள்ளப் போவதில்லை என்று திட்டவட்டமாக கூறியுள்ளது.

தங்களிடம் வரி குறைப்பு மற்றும் வரி விலக்கு கோரும்நாடுகளிடம், சீனாவை தனிமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க, அமெரிக்கா அழுத்தம் கொடுக்க முடிவு செய்துள்ளதாக ப்ளூம்பெர்க் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சூழலில், சீனா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. (ஐ)

## கனடாவில் மீண்டும் ஹிந்து கோவில் மீது காலிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல்



கனாவில் குருத்ராவை காலிஸ்தான் பயங்கரவாதிகள் சேதப்படுத்தினர். தற்போது மற்றொரு லட்சுமி நாராயணன் ஹிந்து கோவிலை காலிஸ்தான் பயங்கரவாதிகள் சேதப்படுத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கனடாவின்வான்கூவர்நகரில்உள்ள குருத்வாராவை காலிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். நேற்று நடந்த இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சூழலில், மற்றொரு லட்சுமி நாராயணன் ஹிந்து கோவிலை காலிஸ்தான் ஆதரவாளர்கள் சேதப்படுத்தி உள்ளனர்.

கோவில் சுவர்களில் மையில் காலிஸ்தான் ஆதரவு வாசகங்களை எழுதி வைத்துள்ளனர். சுவர்களை சேதப்படுத்தி உள்ளனர். இது குறித்து கனடாவில் உள்ள ஹிந்து அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை:


கனடாவில் குருத்வாரா மீது தாக்குதல்: காலிஸ்தான் பயங்கரவாதிகள் அட்டூழியம்

காலிஸ்தானி பயங்கரவாதிகளால் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள லட்சுமி நாராயண் கோவிலில் நடந்த நாசவேலையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஹிந்து வெறுப்பு என்ற இந்த செயலுக்கு கனடாவில் இடமில்லை. விரைவான நடவடிக்கையை நாங்கள் வலியுறுத்துகிறோம். மேலும் வெறுப்புக்கு எதிராக அனைத்து மக்களும் ஒன்றுபட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து கனடா எம்.பி., சந்திரா ஆர்யா வெளியிட்டுள்ள அறிக்கை: பல ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய ஹிந்து கோவில்கள் மீதான தாக்குதல்கள் இன்றும் குறையாமல் தொடர்கின்றன. இந்த செயல் கண்டிக்கத்தக்கது.

பயத்தையும், பிரிவினையையும் பயங்கரவாத சக்திகள் ஏற்படுத்த முயற்சிக்கிறது. அதிகாரிகளிடமிருந்து உடனடி நடவடிக்கையை கோர வேண்டிய நேரம் இது. மவுனமாக இருப்பதால் இனி ஒரு பயனும் கிடையாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

# அதிபர் டிரம்புக்கு எதிராக அமெரிக்காவில் போர்க்கொடி



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் கொள்கைகளை எதிர்த்து, நாடு முழுதும் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்க அதிபராக குடியரசு கட்சியைச் சேர்ந்த டொனால்டு டிரம்ப், 78, கடந்த ஜன., 20ல் பதவியேற்றார். அரசின் செலவினங்களை குறைக்கும்நோக்கில், பல்வேறு துறைகளில் பணிபுரிந்த ஊழியர்களை அவர்பணிநீக்கம் செய்தார்.

மேலும், 'அமெரிக்காவுக்கே முன்னுரிமை' என்ற கொள்கையின்படி, பல்வேறு நாடுகளுக்கு அதிக வரிகளை விதித்தார். தொடர்ந்து, அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறிய வர்களை, அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பி வருகிறார்.

அரசுக்கு எதிராக போராட்டங்களில் ஈடுபடும் வெளிநாட்டு மாணவர்களின் விசாக்களை ரத்து செய்து, அவர்களையும் நாட்டை விட்டு வெளியேற்றி வருகிறார். அதிபர் டிரம்பின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 'ஹேண்ட்ஸ் ஆப்' என்ற பெயரில், அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கானோர் கூடி, கடந்த 5ம் தேதி போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், இரண்டாவது கட்டமாக இந்த போராட்டம் நேற்றும் நடந்தது. நியூயார்க், வாஷிங்டன், டெக்சாஸ், சான் பிரான்சிஸ்கோ உள்ளிட்ட நகரங்களில், அதிபர் டிரம்பின் கொள்கைகளை கண்டித்து, பதாகைகளை ஏந்தி ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நியூயார்க்கில், பிரதான நூலகத்திற்கு வெளியே கூடிய மக்கள், 'அமெரிக்காவில் மன்னர்கள் இல்லை கொடுங்கோன்மையை எதிர்க்க வேண்டும்' என்ற முழக்கங்களை எழுப்பினர். இது போல டெக்சாஸ், வாஷிங்டன் உள்ளிட்ட நகரங்களிலும், அதிபர் டிரம்புக்கு எதிராக போராட்டம் நடந்தது. (ஐ)

## தூக்கத்தில் ஜோ பைடன் அதிபர் டிரம்ப் விமர்சனம்

"தூக்கத்தில் இருந்த ஜோ பைடன் குற்றவாளிகளை நம் நாட்டிற்குள் நுழைய வேண்டுமென்றே அனுமதித்தார்" என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார். கொலைகாரர்கள், போதைப்பொருள் கடத்தல் காரர்கள் உள்ளிட்டோரை நம் நாட்டிற்குள் கொண்டுவருவதற்கு மிகவும் கடினமாக போராடி சதி செய்யும் தீவிர இடதுசாரி பைத்தியக்காரர்கள் உட்பட அனைவருக்கும் ஈஸ்டர் வாழ்த்துக்கள்.

நமது தேசத்தின் மீதான இந்தக் கொடூரமான தாக்குதலைத் தொடர அனுமதிக்கும் பலவீனமான மற்றும் பயனற்ற நீதிபதிகள் மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கும் ஈஸ்டர் வாழ்த்துக்கள், இது ஒருபோதும் மறக்க முடியாத அளவுக்கு வன்முறையானது.

தூக்கத்தில் இருந்த ஜோ பைடன், அமெரிக்கா மீது இதுவரை நிகழ்த்தப்பட்ட மிகவும் பேரழிவு தரும் செயலாக வரலாற்றில் இடம்பிடிக்கும் திறந்த எல்லைக் கொள்கையின் மூலம், கோடிக்கணக்கான குற்றவாளிகளை நம் நாட்டிற்குள் நுழைய வேண்டுமென்றே அனுமதித்தார். அவர் மிகவும் திறமையற்றவர். அவர் என்ன செய்கிறார் என்பது முற்றிலும் தெரியாத ஒரு மனிதர். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)



## கத்தோலிக்க..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவிகளைப் பெற்ற அவர் 2001 ஆம் ஆண்டில் கார்டினல் ஆகப் பதவி உயர்த்தப்பட்டார்.

2013 ஆம் ஆண்டு போப் ஆக இருந்த பெனடிக்ட் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, புதிய போப் ஆக பிரான்சிஸ் தேர்வு செய்யப்பட்டார்.

ஜார்ஜ் பெர்கோகிலோ என்ற இயற்பெயர் கொண்ட போப் பிரான்சிஸ், அந்தப் பதவியில் அமர்ந்த முதல் லத்தீன் அமெரிக்கர் என்ற பெருமையைக் கொண்டவர்

## சஹ்ரானுக்கும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காமும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று நடைபெற்ற ஆராதனை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஜனாதிபதியிடம் ஏழு கோரிக்கைகளை முன்வைத்தார்.

இதற்கமைய, நாடாளுமன்ற நூலகத்தில் மாத்திரம் தற்போது வைக்கப்பட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுமையான அறிக்கையைச் சபையில் சமர்ப்பித்து, மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைத்து சக்திகளையும் அடையாளம் கண்டு, உண்மையை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் எந்தப் பதவி நிலையில் இருந்தாலும் அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் உள்ள அனைத்து பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சஹ்ரான் ஹாசீமுக்கும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல் சனல் 4 நிகழ்ச்சியின் முக்கிய சாட்சியான ஆஸாத் மௌலானா தெரிவித்த விடயங்கள் உட்பட சனல் 4 இன் ஆவணப் படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பேராயர் வலியுறுத்தினார்.

## சாமர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றிய போது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில்,

இன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுபவம் மிக்கவர்களைச் சபைக்கு அனுப்புமாறும் கோரினேன். எனினும், எல் போர்ட் காரர்கள் சபைக்கு வந்தனர். இன்று வாகனத்தைச் சேதப்படுத்திவிட்டனர். வாகனத்தில் எடுப்பதற்கு ஒன்றும் இல்லை." - என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கப்போவதில்லை.

எனவே, பெரும்பான்மையைப் பெறுவதற்கு எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். பெரும்பான்மைப் பலம் இருந்தால்தான் சபைத் தலைவரைத் தெரிவு செய்ய முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

எனவே, நாம் எவருடனும் மோதத் தேவையில்லை. பெரும்பான்மையைப் பெறுவதற்கு முயற்சிப்போம் என்றும் ரணில் கூறினார்

## பாப்பரசரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரது இரக்கம், நீதி மற்றும் மதங்களுக்கு இடையேயான நல்லிணக்கம் ஆகியவற்றின் மரபு, எதிர்வரும் தலைமுறைகளுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கட்டும்." - என்றுள்ளது.

# வெளிநாட்டில் உள்ள சகோதரர்கள் பணம் அனுப்பவில்லை என்ற விரக்தியில் தவறான முடிவெடுத்து நபர் ஒருவர் உயிரிழப்பு!

யாழ். சாவகச்சேரி, கைதடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

கைதடி பகுதியைச் சேர்ந்த 50 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

உயிரிழந்த நபருக்கு நான்கு சகோதரர்கள் உள்ளனர். அவர்கள் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் வெளிநாடுகளில் உள்ள சகோதரர்கள் தனக்கு பணம் அனுப்பவில்லை என்ற விரக்தியில் கடந்த 18ஆம் திகதி நஞ்சருந்தியுள்ளார். குறித்த நபர் நஞ்சருந்திய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றைய தினம் (19) யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன், உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மோட்டார் சைக்கிள் மீது நாய் மோதி விபத்து கணவனும் மனைவியும் பரிதாப உயிரிழப்பு!

அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதியில் பெலிகமுவ மஹா கடை சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிள் மீது நாயொன்று மோதியதில் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளனர்.

விபத்தின் போது தெஹியத்த கண்டிய பகுதியைச் சேர்ந்த 31 வயது கணவனும் 28 வயதான மனைவியுமே உயிரிழந்துள்ளனர்.

கடவுச்சீட்டு பெறுவதற்காக அவர்கள் தெஹியத்தகண்டியிலிருந்து குருநாகலுக்கு பயணம் மேற்கொண்ட போதே இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. இன்று காலை 6.30 மணியளவில், கலேவெல திசையிலிருந்து குருநாகல் திசை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், வீதியை கடந்த நாய் ஒன்றுடன் மோதியதில், கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி தூண் ஒன்றில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத்திய சாரதி, அவருடன் பயணித்த பெண் மற்றும் குழந்தையும் காயமடைந்து கலேவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சாரதியும் பெண்ணும் உயிரிழந்தனர். படுகாயமடைந்த ஒன்றரை வயது மகன் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையான் தொடர்பில் நாமலும் பதற்றம் - அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ




முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கவலையடைவதற்கு காரணம் உள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அதனை எதிர்காலத்தில் அனைவரும் அறிந்து கொள்ள முடியும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணைக் குழு உரிய முறையில் விசாரணைகளை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் ஊடாக சூத்திரதாரிகளுக்கு தண்டனை

அரசாங்கம் என்ற அடிப்படையில் அதற்கான வசதிகளை மாத்திரம் தங்களது தரப்பு வழங்குவதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை தொடர்ந்து சட்டமா அதிபரால் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்கப்படும். அதோடு ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய சரியான சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவார்கள்.

அவ்வாறு இடம்பெறும் போது உதய கம்மன்பில, ரணில் விக்ரமசிங்க, நாமல் ராஜபக்ஷ மற்றும் சரத் வீரசேகர போன்றோர் பதற்றமடைவது தொடர்பில் எமக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் பெண்ணியக்க.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவு செய்துள்ளார். 1923 இல் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தில், பெண் தொழிலாளர்கள் பங்கு பற்றியிருந்தனர். 1948இல் ஐக்கிய பெண்கள் முன்னணி என்ற இடது சாரிய பெண்கள் அமைப்பு, சோஷலிசத்தை அடிப்படையாக கொண்டும் பாலின பாரபட்சங்களை இல்லாதொழிக்கும் இலக்கோடு உருவானது.

பெண்ணிய ஆய்வாளர் குமாரி ஜயவர்தனவின் பல நூல்களில் மேற் கூறிய பெண் ஆளுமைகள் பற்றிய குறிப்புகள் காணக்கூடியதாக உள்ளன. 19ஆம் நூற்றாண்டில் ஆணாதிக்க சிந்தனை கட்டமைப்புகளுக்கு எதிராக பல்வேறு பெண் கவிஞர்களும் பெண் எழுத்தாளர்களும் விவாதிக்கத் தொடங்கியதாகவும் இவர் கூறியுள்ளார்.

இவ்வாறான பெண்களின் மறைக்கப்பட்ட வரலாற்றை மீளக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஒரு பகுதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தில் தமிழில் பெண்கள் இலக்கியம் என்ற பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மட்டத்தில் இங்கு மாத்திரமே இப்பாடநெறி உண்டு (தற்போதும் உள்ளதா என்று உறுதிப்படுத்த வேண்டியுள்ளது). இதற்குக் காரணமாக இருந்தவர் எழுத்தாளர், கவிஞர், மொழி பெயர்ப்பாளர், பேராசிரியர், சோஷலிச பெண்ணியவாதி என பன்முக திறன்களை தன்னகத்தே கொண்ட சித்ரலேகா மௌனகுரு அவர்கள்.

1970களில் இலங்கை பெண்ணியலாளர்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா போன்ற தேசங்களிலிருந்த பெண்ணிய ஆளுமைகளோடு தொடர்புகளைக் கொண்டிருந்தனர். எகிப்திய பெண்ணியலாளர் நவல் சாடாவி (யேறயட நுட ளுயயனயறi) இலங்கைக்கு விஜயம் செய்ததை நினைவு கூறுகிறார் குமாரி ஜயவர்த்தன.

பெண்ணியம் என்ற கருத்தியல் மேற்குலக நாடுகளால் மூன்றாம் உலக நாடுகள் என அழைக்கப்படும் தேசங்களில் திணிக்கப்பட்ட ஒன்றாக நாம் கற்பனை பண்ணுவது மிகவும் தவறான சிந்தனை எனவும் ஒவ்வொரு நாடுகளும் தமக்கான தனித்துவமான பெண்ணிய வரலாற்றை கொண்டவை என குமாரி தனது எழுத்துக்களில் விவரித்துள்ளார். இந்த உண்மை, மேற்கூறிய தகவல்கள், மேற்கோள்கள் மூலம் இலகுவில் பகுத்தறிந்து அறியக்கூடியதாக உள்ளது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10க்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!